# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி I (வெளிவாரி) - 2004/05
## (ஒக்ரோபர்/நவம்பர் – 2006)

## TL 201 – தமிழ் மொழியின் இலக்கணம்

நேரம்: 3 மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தது இரு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி I

1. மொழி முதல் எழுத்துக்கள் குறித்து தமிழிலக்கணகாரர் கூறுவனவற்றை விளக்கி, அவற்றின் தற்காலப் பொருத்தப்பாட்டினைத் தெளிவுறுத்துக.

2. அ) சார்பெழுத்து என்றால் என்ன?
   ஆ) நன்னூலார் கூறும் சார்பெழுத்துக்கள் பற்றிச் சுருக்கமாக விளக்கி அவற்றின் தற்காலப் பயன்பாடு குறித்துக் கருத்துரைக்குக.

3. அ) திசைச் சொற்கள் பற்றி நன்னூல் யாது கூறுகின்றது?
   ஆ) தமிழில் பிறமொழிச் சொற்கலப்பு குறித்து விளக்குக.

4. அ) பதம் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?
   ஆ) அவற்றுள் யாதாயினும் ஒன்று பற்றி நன்னூலை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.

### பகுதி II

5. எச்சவினை குறித்து நன்னூல் கூறுவனவற்றை உதாரணங்களுடன் விளக்குக.

6. அ) ஆகுபெயர் என்றால் என்ன?
   ஆ) நன்னூல் குறிப்பிடும் ஆகுபெயர் வகைப்பாட்டினை மதிப்பிடுக.

7. இடைச்சொற்களின் முக்கியத்துவத்தினை ஏகார ஓகார இடைச்சொற்களை ஆதாரமாகக் கொண்டு பரிசீலிக்குக.

8. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு குறிப்புரை எழுதுக.
   அ) எழுவாய் வேற்றுமையும் விளிவேற்றுமையும்
   ஆ) எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி
   இ) உரிச்சொற்கள்
   ஈ) தொகை நிலைத் தொடர்கள்